1782

No. M. 2475. MAY, 1930. Vol. V—5.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்ட்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதராஸ்:

JUN 1930

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 29. | பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் விஞ்ஞாபனம். | 69 |
| 30. | பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனின் ஜெனரல் பாடி மீடிங்கின் நடவடிக்கைகள். | 70 |
| 31. | ஷை யூனியன் வரவு சிலவு கணக்கு ... ... | 73 |
| 32. | நமது உணவு ... ... ... | 76 |
| 33. | கொழுப்புகள் ... ... ... | 79 |
| 34. | பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ... ... | 81 |
| 35. | மதிப்புரை ... ... ... ... | 86 |


வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணா 6.

எடிடர் & மானேஜர்:
ஏ. சுவாமிநாதய்யர் பி. ஏ.

ஆச்சரியமுள்ளது !

அதிசயிக்கத்தக்கது ! !

# தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாது புஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதை காலை மாலை நோய் பலம் போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தைக் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடைய வேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும், கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, காக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும். பத்தியமில்லை. 100-நாளைக்கு தங்க ரேக்கும், சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25. சிங்கப்பூர், பினாங்கு F. M. S. வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசு பெற்றது.

# சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீர தத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரிய தத்துவத்தையும், ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேக பலத்தையும், மின்னுள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், எழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெற வில்லை என்று ருஜுப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்து சாலையிலிருந்து ரூபா 5000 வெகுமதி அளிக்கப்படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும், தற்காலம் ரூபா பதினாயிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டப் படி 10 ரூபா ஸ்டாம்பின் பேரில் எழுதி சர்க்கார் டாக்ளாத்தில் 933-குழி விஸ்தீரண நன்சை வகைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே ! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள் ! உள்ளபடி ஜெயம் பெறுவீர்கள் ! !

இதன் கிரயம் [எவ்வித பத்தியமுமில்லை.]

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா ... ... 15-0-0.
48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 8 0-0.
24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 4-4-0.

சவுத் ஆப்ரிக்கா, டிரான்சிவால், சுமத்ரு, ஜாவா, பிலப்பீஸ், கொச்சின் சீனு, பிஜி முதலிய வெளி நாட்டு ஆர்டர்கள் பார்சல செலவுக்கு ரூபா 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

# தாமரை லிங்கத் தைலம்.

கனவான்களே ! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின் மீது தேய்த்த உடன் தாங்கள் இது வரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான கருவிகளைப் பெருகச் செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகு மென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரூ. 1 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

எங்கள் விலாசம்:— **ஸாஹேபியா மருந்துசாலை,**

நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது பத்திரிகை பேரைக் குறிப்பிடவும், கேட்லாக் இனாம்.

# 1895-ம் ௵ ஸ்தாபிக்கப் பட்டது

## பழமையான கரூர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிராவிடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக்கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொருப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளி தினுசுகள் சுத்த வெள்ளியினால் கையினால் செய்யப்பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாகவுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் எங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அனுபவமுண்டு.

ஆதலால் நம்முடைய அனுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்ல தருணம்.

## ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட். மதராஸ்.

# தி யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

தலைமை ஆபீசு: கராச்சி.

நீங்கள் பால்யமானால்,

உங்களுக்குத் தகுதியான வேலை நம்மிடம் கிடைக்கும்.

நீங்கள் வயோதிகரானால்,

நம்மிட கம்பெனியின் எஜெண்டாக நீங்கள் வேலை செய்யலாம். அப்படிச் செய்தால் உங்களுக்குத் தக்க ப்ரதி பலன் கிடைப்பதோடு, உங்களுக்கு அத்யமத்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கும்.

அரையணா செலவு செய்து முழு விவரம் கேளுங்கள்.

நாம் கொடுப்பவை:—

(1) குறைந்த செலவில் புதுமையான பாலிஸிகள்.

(2) யெதானவர்களுக்குத் தக்க வருமானம்.

(3) வெளியில் நமது ஏஜண்டாக வேலை செய்பவர்களுக்குள் ஒருவருக்கு நமது கம்பெனியின் மேல்பார்வை கமிட்டியில் ஒரு ஸ்தானம்.

மற்ற விவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,
யுனைடெட் நாஷனல் இன்ஷூரேன்ஸ்
கம்பெனி லிமிடெட்,
ட்ரீடீ ரோட், கராச்சி.

---

## சுகாதார பாடங்கள்.

I, II, IIIவது பாரங்களுக்கு (விலை முறையே, 6 அணா, 4 அணா, 6 அணா) வீரவநல்லூர், ஸெகண்டரி பாடசாலை ஆசிரியர் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியவை.

தமிழ்நாடு "சிறு சிறு பாடங்களாக பல படங்களுடன் ஆசிரியர் சுகாதார முறைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்"

ஆரோக்ய தீபிகை "சுலப நடையில் சிறுவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும்படி எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலைகளிலும் இவைகளைப் பாடப் புத்தகங்களாக வைப்பார்களென்று நம்புகிறோம்".

ஊழியன் "பள்ளி மாணவர் மட்டுமன்று; பிறரும் படித்துப் பெரும் பயனடையத் தக்கவை".

புத்தகங்கள் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மைலாப்பூர், மாரி செட்டி தெரு 2 ந வீடு K. S. M... சாஸ்திரிகளிடமும் கிடைக்கும்.

149394

---



ரப்பர் ஸ்டாம்புகள்.

பதக்கங்கள் பரிசு பெற்றவை

குறைந்த தொகை — — — சிறந்த

வேலைப்பாடு திருப்தியைத் தந்திடும்.

இன்றேல் பணம் வாபீஸ்.

கேடலாக் இனாம்.

மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,

தபாற் பெட்டி 74. மதராஸ்.



RUBBER-STAMPS

— AWARDED MEDALS —

LOWEST PRICES — BEST QUALITY

SATISFACTION GUARANTEED

OR YOUR MONEY BACK.

CATALOGUE free.

The Madras Rubber Stamp Mfg. Co.

POST BOX 74, MADRAS.



రబ్బరు స్టాంపులు.

మెడల్సు పొందినవి.

వెల సరసము పలమధికము.

తృప్తికే మేము ఉత్తరవాదము.

లేనియెడల మీసొమ్ము వాపసు.

కేటలాగ్ ఇనాము.

ది. మదరాసు రబ్బరు స్టాంపు కంపెని.

తపాలు పెట్టె 74, మద్రాసు.

---

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ. 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம், வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5.

வந்துவிட்டது ! வந்துவிட்டது !

கூட்டுறவினருக்கும் பஞ்சாயத்தார் களுக்கும் அத்யாவசியமானது
உடனே ஆர்டர் செய்யுங்கள்.

## கூட்டுறவு முதல் நூல்.
(PRIMER OF CO-OPERATION,)

பம்பாய் மாகாண கூட்டுறவு இன்ஸ்டிட்யூட் வைஸ் பிரசிடெண்டும் ஸைடென்ஹாம் காலேஜ் ப்ரொபஸருமான எச். எல். காஜி, எம். ஏ. பீ. எஸ். ஸி., ஐ. ஈ. எஸ்., ஜே. பி. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதின புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு.

விலை அணு 8. தபால் கூலி 4 அணு வேறு.
தெலுங்கிலும் இப்புத்தகம் தயார். விலை அணு 10 தபால் கூலி 4 அணு.
ஸிடி புக் கம்பெனி. தபால் பெட்டி 283, மதறாஸ்.

வந்து விட்டது ! வெளி வந்து விட்டது ! !

இந்திய கிராமவாசிகளுக்கு முக்கியமான ஒரு புதப்புஸ்தகம் !—நாவல்களையும் நாடகங்களையும விட அதிக உபயோகமானது—உங்கள் கிராமத்தில் யாராவது ஒரு காபி வாங்கி இருக்கிறார்களா ? இல்லாவிட்டால் உடனே ஒரு காபிக்கு ஆர்டர் கொடுங்கள்,

## இந்திய கிராம ஜீவனோபாய முறை
(INDIAN RURAL ECONOMICS.)

ஐதராபாத நிஜாம் காலேஜில் ஜீவனோபாய கல்விப் ப்ரொபஸரும்,
மைசூர் ஸமஸ்தானத்தில் சிலகாலம் ஜீவனோபாய முறைகளை
ஆராய்ச்சி செய்துவந்தவருமான
ஸ்ரீமான் எஸ். கேசவய்யங்கார்.
அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள புஸ்தகத்தின் மொழிபெயர்ப்ட.

பொருளடக்கம்.

1. Economic Enquiry—ஜீவனோபாய ஆராய்ச்சி. 2. Rural Economic Surveys—கிராம ஜீவனோபாய பரிசோதனை. 3. Agricultural Holdings—பயிரிடு நிலங்கள். 4. Agriculture and Future Policy—விவசாயமும் இனிச் செய்யவேண்டிய வேலையும். 5. Forests—இந்தியாவிலுள்ள காடுகள். 6. Transport—பொருட்களை இடமாற்றுதல். 7. Trade—இந்திய வியாபார முறை. 8. Capital—பணமுதல். 9. Rural Life in India—இந்தியக் கிராம வாழ்க்கை. 10. Labour—ஊழிய நிலைமை. 11. Education—கல்வி. 12. Rural Reconstruction—கிராம புனருத்தாரணம்.

சொந்தமாக புஸ்தகம் வாங்க முடியாதவாகள் ஸமீபத்திலுள்ள பள்ளிகூடம அல்லது கூட்டுறவு சங்கத்து அதிகாரியைப் பார்த்து அவர்கள் லைப்ரெரிக்காவது இந்தப் புஸ்தகத்தை வாங்கச் செய்யவேண்டும்.

நாவல்களிலும நாடகத்திலும் மூழ்கிப்போகும் சிறுவாகள், சிறமிகளிடத்தில இந்தப் புஸ்தகத்தைக கொடுததால் மறுநாள் முதல் அவர்கள் செய்யும் வேலைகள் குடும்பத்துக்கும் கிராமத்துக்கும் அதிகமான நன்மையை உண்டுபண்ணும். விலை ரூ. 5. தபால் கூலி 8 அணு.

உங்கள் விலாசம தெரிவித்தால், எங்கள் தமிழ் இக்கலீஷ் காட்லாக் அனுபபுகிறோம.

ஸிடி புக் கம்பனி, தபால் பெட்டி 283, மதறாஸ்.
The City Book Co.,---P. B. 283 Madras.

2 JUN 1930

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V. 1930ளு மேமீ. நெ. 5.

## பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் விஞ்ஞாபனம்.

நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்தார் யூனியனுனது மே மாதம் நடத்த ஜெனரல் பாடி மீடிங்கில் 1930 ளு ஜுலை மாதத்தில் கடைசி வாரத்தில் சென்னையில் ஒரு கன்பரன்ஸைக் கூட்ட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கு தற்போது அநேக முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. நாம் பிரதவருஷமும் கன்பரன்சுகளை நடத்தி நமது மாஹாண யூனியனை வலுக்கச் செய்தால் ஒழிய நமது இயக்கம அழிந்து போகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆகவே எல்லாப் பஞ்சாயத்தாகளும் கன்பரன்சுக்கு விஜயம் செய்ய வேண்டும். இந்தத் தடவை நடக்கப் போகிற கன்பரன்சு வெகு முக்கியமான கன்பரன்சு. கவர்னர் அவர்களையும் கவர்மெண்டு மெம்பர்களையும் இதர பிரமுக கனவான்களையும் அதற்கு போர்டு மெம்பர்களையும் விஜயம்செய்யும்படி கேட்டுக்கொள்ளப்போகிறோம். ஆகவே, சிலவு அதிகமாகு மென்பதில்சந்தேகமேயில்லை. பிரதி பஞ்சாயத்தும் 5 ரூபாயிக்குக்குறையாமலும் 10-க்குமேல் படாமலும் பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் கன்பரன்ஸோடு வெகுசாய் காட்டுப் பொருள் காக்ஷியும், வியவஸாயக் கருவிக் காக்ஷியும, சுகாதார விஷயக் காக்ஷியும், மாட்டு அபிவிருத்தி விஷயக் காக்ஷியும் நடை பெறக்கூடும். கன்பரன்சு தக்கபடி நன்றாய் நடப்பது பணத்தைப் பொருத்திருக்கிறது. எல்லா பஞ்சாயத்துகளும் பணம் அநுப்ப வேண்டும் என்று இன்னொரு தடவை கேட்டுக் கொள்கிறோம். ஜுன் மாதம் 20

தேதிக்குள் டொனேஷன்களை அநுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கன்பரன்சின் தேதியும் இடமும் இதர விவரங்களும் அடுத்த விளம்பரத்தில் தெறிவிக்கப்படும். மணிஆர்டர்களை அடியில் கண்ட விலாசத்திற்கு அநுப்பவும்.

இப்படிக்கு

ஏ. இராஜகோபால் ரெட்டி

பிரஸிடெண்டு பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்,

பாலவாக்கம் ஊத்துக் கோட்டை போஸ்டு

28-5-30.

செங்கல்பட்டு ஜில்லா.

சென்னை மயிலாப்பூர் மாரி செட்டி தெரு 2வது கதவிலக்கமுள்ள வீட்டில் 1930-ம் வருஷம் மே மீ 16உ யன்று சென்னை மாஹாண பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனின் ஜெனரல் பாடி மீடிங்கின் நடவடிக்கைகள்.

(1) 1930-ம் வருஷம் மார்ச்சு மீ 31உ வரையிலுள்ள மேற்படி யூனியனின் வரவு சிலவு கணக்கும் டைரக்டர்களின் ரிபோர்டோடும ஆடிட் ரிபோர்டோடும் எல்லோராலும் ஒரே மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

(2) எரையூர் பஞ்சாயத்து பிரசிடெண்டு ம-ள-ள-ஸ்ரீ ஈசுவர ஐயர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ம-ள-ள-ஸ்ரீ சுவீகார நல்லப்ப ரெட்டியார் அவர்களால் ஆமோதக்கப்பட்டு எல்லோராலும் ஒரே மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டு (1) ம-ள-ள-ஸ்ரீ ஏ. இராஜகோபால ரெட்டிகாருவும், (2) பள்ளிகுப்பம் பாரெஸ்டு பஞ்சாயத்தைச்சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ சின்னஸாமி ரெட்டியார் அவர்களும், (3) மாமண்டூர் பாரெஸ்டு பஞ்சாயத்தைச் சேர்ந்த ஷேக் அப்துல்லா ஸாஹிப் அவர்களும, (4) மேல் புழுதியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ என். ராஜி ரெட்டிகாருவும, (5) மணக்கொல்லை பாரெஸ்டு பஞ்சாயத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ என். ஆர். சுப்பராயலு ரெட்டிகாருவும, (6) அமமூர் பாரெஸ்டுப் பஞ்சாயத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ வி. வி. எஸ். ஸ்ரீநிவாஸாச்சார்யார் அவர்களும், (7) எடுமலை பாரெஸ்டு பஞ்சாயத்தைச் சேர்ந்த அபூபகர் சாகிப் அவர்களும், (8) பந்தார்ல பல்லி பஞ்சாயத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ பெத்தா சித்தம நாயுடுகாருவும், (9) சீயஞ்சாத்தி பாரெஸ்டு பஞ்சாயத்தைச் சேர்ந்த ம-ள-ள-ஸ்ரீ சுங்கர வெஙகட சுப்ப ரெட்டிகாருவும் 1930-31 வருஷத்திற்கு யூனியனின டைரெக்டர்களாகத் தீர்மானிக்கப் பட்டார்கள.

(3) ஜெனரல்பாடி மீடிங்குகளுக்குக் கோரமானது ஆர்டிகில்ஸ் ஆப் அஸ்ஸோஷியேஷனின் 23வது ஆர்டிகில்படி 50 ஆக இல்லாமல் 20 இருக்க வேண்டுமென்று எல்லோராலும் ஒரே மனதாகத் திர்மானிக்கப் பட்டது.

(4) ம-ள-ள-ஸ்ரீ ஈசுவர ஐயர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ம-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒரே மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு யூனியனும் ரூரல் இந்தியா பத்திரிகையும் 1930-ம் வருஷம் ஜூலை மாதம் வரையில் நடத்தப்பட வேண்டுமென்றும் பிறகு அவைகள் நடைபெறுகிற விஷயம் பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களின் அடுத்த மாஹாண கன்பரன்சில் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.



(5) ம-ள-ள-ஸ்ரீ வி. வி. எஸ். ஸ்ரீநிவாஸாச்சார்யார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு ம-ள-ள-ஸ்ரீ ராஜு ரெட்டிகாருவால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒரே மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு அடியில் கண்ட தீர்மானம் கைக்கொள்ளப்பட்டது:—

ரூரல் இந்தியா பத்திரிகையும் யூனியனும் பண ஒத்தாசை யில்லாமலே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டமையாலும், அநேக பஞ்சாயத்துகள் சந்தாத் தொகைகளை பாக்கி வைத்துக் கொண்டிருப்பதால் பாக்கித் தொகை ரூ. 3834-3-0யாக ஏற்பட்டிருப்பதாலும் டிபாஸிட்டுகளின் பேரில் வட்டியே கொடுபட வேண்டியதில்லை, 1930-ம் வருஷம் ஜூலை மாதம் வரையில் சிலவுகளுக்காக டிபாஸிட்டுப் பணங்களில் 100க்கு 10 விகிதம் பிடித்து வைக்கப்பட வேண்டும், அப்படி பிடிக்கப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுக்கிற விஷயம் அடுத்த மாஹாணக் கன்பரன்ஸில் தீர்மானிக்கப்பட வேண்டும்."

(6) a. எல்லா பாரெஸ்டு பஞ்சாயத்துகளும் யூனியனில் 5 ஷேர்களுக்குக் குறையாமல் ஷேர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், டிபாஸிட் வைத்திருக்கும் பஞ்சாயத்துகள் அவசியமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், எல்லோராலும் ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

b. 1930-ம் வருஷம் ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தில் சென்னையில் மாஹாணக் கன்பரன்சு நடத்தப்பட வேண்டுமென்றும், அக் கன்பரன்ஸில் அநேக முக்கியமான விஷயங்கள் ஆலோசனைக்கு வரப்போகிற படியாலும் மாஹாணத்திலுள்ள பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்கள் அனைவரும் ஒருவர் கூடத்தவறாமல் அதற்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும், கன்பரன்சு சம்பந்தமாய் எப்போதையும் காட்டிலும் அதிகச் சிலவு ஏற்படுமாதலால் பஞ்சாயத்தார்கள் தாராளமாய்ப் பண உதவி (Donation) செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய கடமையென்றும் எல்லோராலும் ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

c. பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்காக ரெவின்யூ போர்டாரால் ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டர் தயாரிக்கப்பட்டது; அதன் சம்பந்தமாக கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஒரு கம்மிட்டி ஆலோசனைகளைச் செய்தது. அக் கம்மிட்டியின் தீர்மானங்களும் மேற்கூறிய ஸ்டாண்டிங்கு ஆர்டரில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நமது யூனியனின் பிரஸிடெண்டு அவர்கள் இவை சம்பந்தமாக யூனியனின் சார்பில் அபிப்பிராயப் பத்திரம் ஒன்றைத் தயார்

செய்திருக்கிறார். அவ்வபிப்பிராயங்களை இந்த ஜெனரல்பாடி மீடிங்கு ஒரே மனதுடன் ஒப்புக்கொண்டு ஸ்டாண்டிங்கு ஆர்டரை அதன்படித் தக்கபடி வேண்டிய இடங்களில் மாற்றி வரைய வேண்டுமென்று கவர்மெண்டாரை ஒரே மனதுடன் வெகு வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

d. யூனியனுக்குப் பணம் அதிகமாயிராமலிருப்பதால் பிரஸிடெண்டும் டைரெக்டர்களும் இனிமேல் அடியில் கண்ட விகிதப்படிதான் டிராவெல்லிங்கு அல்லவுன்ஸுகளை அடைய வேண்டுமென்று எல்லோராலும் ஒரே மனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

பிரஸிடெண்டு அவர்களுக்கு ரெயில்வேயில் போகவர இரண்டாவது கிளாஸ் சார்ஜீ ஒன்றும், மைலேஜு மைலுக்கு 2 அணா விகிதமும், டெய்லி பாட்டா நாளொன்றுக்கு 2 ரூபாயும் மற்ற டைரெக்டர்களுக்குப் போகவர 2 மூன்றாவது கிளாஸ் சார்ஜும், மைலேஜி மைலுக்கு 2 அணா விகிதமும், டெய்லி பாட்டா நாளொன்றுக்கு ரூ. 1-8-0 விகிதமும்.

e. இது வரையில் நடந்த கன்பரன்சுகளிலும் மீடிங்குகளிலும் கைக் கொள்ளப்பட்ட வேண்டுகோள்களில் ஒன்றுக்குக்கூட கவர்மெண்டார் இணங்காமலிருப்பது விசனிக்கத்தக்கதென்றும் கவர்மெண்டார் இனியாவது சீக்கிரமாக அவைகளைப் பற்றி ஆலோஜித்து தக்க உத்திரவுகளை வெளியிடுவார்களென்றும் வணக்கமாய்க் கோரப்படுகிறதென்றும் எல்லோராலும் ஒரே மனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

f. அநேக பாரெஸ்டு பஞ்சாயத்து டிப்டி தாசில்தாரகள் பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட் விஷயமாக விரோத மனப்பாங்குடன் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்தி யூனியனை ஓங்கவிடாமல் செய்கிறார்கள். கவர்மெண்டார இது சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி அவர்களின் முயர்ச்சிகளை கண்டனம் செய்ய வேணுமென்று வணக்கமாய்க் கோட்டுக் கொள்ளப் படுகிறார்களென்று எல்லோராலும் ஒரே மனதுடன் ஒரு தீர்மானம் கைக் கொள்ளப்பட்டது.

g. நமது யூனியனின் ஹெட் கிளார்க்கும் இரண்டாவது கிளார்க்கும் சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்று எழுதிக் கொண்டிருக்கிற மனுக்கள் படிக்கப் பட்டன. ஹெட் கிளார்க்குக்கு 1930 ௵ மே ௴ 1௳ யிலிருந்து இப்பொழுதிருக்கிற சம்பளத்திற்குமேல் மாதம் ஒன்றுக்கு ரூ. 2-8-0 விகிதம் அதிகச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், 2 மனுக்களிலும் கண்டமற்ற விஷயங்கள் மாஹாணக் கன்பரன்சு நடந்த பின்பு ஆலோசிக்கப் பட வேண்டும் என்றும் எல்லோராலும் ஒரே மனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

ஏ. இராஜகோபால் ரெட்டி,
பிரெஸிடெண்டு.



## பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்.

ஆபீசு 2 மாரி செட்டி தெரு, மயிலாப்பூர், சென்னை.

1930 ௵ மார்ச்சு ௴ 31௳ வரையிலுள்ள 2 வருஷங்களுடைய வரவு சிலவு கணக்கு.

| சிலவு | ரூ. | அ. | ப. | வரவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| அச்சுச் சிலவு பத்திரிகை. | 4,110 | 3 | 0 | ரூரல் இந்தியா சந்தா | 6,990 | 8 | 0 |
| தமிழ் தெலுங்கு பத்திரிகை வரைவோர்க்கு அலவுன்சு. | 480 | 2 | 0 | அட்வர்டிஸ்மெண்டு | 611 | 9 | 4 |
| அட்வர்டிஸ்மெண்டு கமிஷன் வகையரா. | 162 | 12 | 0 | வாடகை வரும்படி | 324 | 11 | 0 |
| சிப்பந்தி சம்பளம் | 1,233 | 4 | 5 | வட்டி வரவு | 1,869 | 3 | 4 |
| வீட்டு வாடகை | 547 | 8 | 9 | புஸ்தகங்கள் பிரிண்டட் பாரங்கள் விற்பனையால் | 13 | 1 | 0 |
| தபால் சிலவு | 930 | 1 | 0 | இதர வரும்படி | 23 | 8 | 0 |
| பிரசிடெண்டுக்கு பிரயாணச் சிலவுகள் | 235 | 3 | 9 | | | | |
| இதர பிரயாணச் சிலவுகள். | 150 | 8 | 7 | | | | |
| ரிஜிஸ்டிரேஷன் சிலவுகள் | 21 | 6 | 0 | | | | |
| ஆடிடர் சம்பளம் | 75 | 0 | 0 | | | | |
| வக்கீல் சிலவு | 50 | 0 | 0 | | | | |
| டைரெக்டர்களுக்கு ஸிட்டிங்கு பீஸ் | 52 | 10 | 0 | | | | |
| சிப்பந்திகளுக்கு போனஸ் | 35 | 0 | 0 | | | | |
| தொழில் வரி (கம்பெனி வரி). | 90 | 0 | 0 | | | | |
| வண்டிச் சிலவு | 36 | 4 | 6 | | | | |
| கண்டிஞ்சண்டு சிலவுகள் | 215 | 7 | 7 | | | | |
| மிஸ்ஸலேனியஸ் | 49 | 8 | 3 | | | | |
| பிரலிமினரி எக்ஸ்பென்ஸஸ். | 296 | 0 | 0 | | | | |
| சிலவுபோக மீந்த தொகை | 1,061 | 8 | 10 | | | | |
| மொத்தம் | 9,832 | 8 | 8 | மொத்தம் | 9,832 | 8 | 8 |

## 1930ஷு மார்ச்சுமீ 31உ கணக்குப்படி பாலன்சு ஷீட்.

### மூலதனமும் லையபிலிடீஸ்களும்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஆதரைஸ்ட் காபிடல் ஷேர் 1 ரூ. விகிதம 20,000 ஷேர்கள். | | | |
| ஷேர்களுக்காக வந்த பணம் ஷேர் 1 ரூ. விகிதம் 710 ஷேர்கள் | 710 | 0 | 0 |
| பஞ்சாயத்து டிபாஸிட்டுகள் | 2,0649 | 5 | 6 |
| முன்னதாக வாங்கப் பட்ட பத்திரிகைச் சந்தா | 103 | 4 | 0 |
| ஸஸ்பென்சு | 54 | 8 | 6 |
| சில்லரைத் தொகைகள் | 121 | 10 | 0 |
| இன்கார்பொரேஷனுக்கு முந்தி ஏற்பட்ட லாபம் | 1,303 | 7 | 1 |
| வரும்படியில் சிலவு போக மிச்சம் | 1,061 | 8 | 10 |
| மொத்தம் | 24,003 | 11 | 11 |

### சொத்துக்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| மேஜை நார்க்காலி முதலிய சாமான்கள் | 78 | 0 | 0 |
| பாக்கியாயிருக்கிற பத்திரிகைச் சந்தா | 3,834 | 3 | 0 |
| புரோநோட்டுக் கடன்கள் 130-0-0 வட்டி 43-1-0 | 173 | 1 | 0 |
| முன்னதாக கொடுத்த வாடகைப் பணம் | 54 | 0 | 0 |
| வீட்டில் குடியிருப்பவர்களிட மிருந்து வரவேண்டிய வாடகை | 85 | 0 | 0 |
| பிரஸிடெண்டிடத்தில் பெர்மனண்டு அட்வான்சு | 50 | 0 | 0 |
| இருப்பு. | | | |
| தபால் ஸ்டாம்புகள் | 11 | 8 | 0 |
| எடிடரிடத்தில் பணம் | 295 | 10 | 5 |
| ஸெண்டிரல் அர்பன் பாங்கி கரண்டு அக்கவுண்டு | 12,882 | 15 | 6 |
| இந்தியன் பாங்கி கரண்டு அக்கவுணடு | 1,396 | 1 | 2 |
| இந்தியன் பாங்கி ஸேவிங்குஸ் பாங்கி அக்கவுண்டு | 2,883 | 0 | 9 |
| ஸெண்டரல் அர்பன் பாங்கி புருடென்ஷியல் டிபாசிட் | 2,260 | 4 | 1 |
| மொத்தம் | 24,003 | 11 | 11 |

ஏ. இராஜகோபால் ரெட்டி,
பிரஸிடெண்டு.

கையொப்பம் — கையொப்பம் சின்னசாமி ரெட்டி.
கே. சாம்பமூர்த்தி ஐயர். ,, ஷேக் அப்துல்லா சாஹிப்,
ஹெட் கிளார்க்கு. டைரெக்டர்கள்.



## ஆடிட் ரிபோர்டு.

1930-ம் வருஷம் மார்ச்சுமீ 31உய கணக்குப்படியுள்ள பாலன்சு ஷீட்டைப் பரிசோதித்தேன். எந்த எந்த விஷயங்களில் விவரங்களும் சமாதானங்களும் தேவையா யிருந்தனவோ அவைகளை யெல்லாம அடைந்து கொண்டேன். திரும்பி வராத கடன்களின் நிமித்தம் ஒரு திட்டமுமில்லை எனபதும, பஞ்சாயத்தார்களின் டிபாஸிட்டுகளுக்கு வட்டி கொடுக்க திட்டம் ஒன்றுமில்லை யென்பதும், யூனியனின் சொத்துகளாகிய, ரூரல் இந்தியா பத்திரிகைக்கு ரிவியூவிற்கு வரும் புத்தகங்களுக்கு ஒரு ரிஜிஸ்டரும் இல்லை யென்பதும் தவிர, நான பரிசோதித்த கணககுப் புத்தகங்களின்படியும், வௌச்சர்களின் படியும பாலன்சு ஷீட்டானது 1930ஷு மார்ச்சு மாதம் 31உயன்று யூனியனின பண விவரங்களை ஸரியாயும் பிழை யில்லாமலும் நிரூபிக்கிறது என்பதை நான் உறுதியாய்க் கூறுகிறேன்.

முகாம்-திருநெல்வேலி
1930 ஏப்ரல் 25உ

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்
பி. ஏ. ஜீ. டீ. ஏ
ஸெர்டிபைட் அககவுண்டண்டு
அண்டு ஆடிடர்.

## டைரெக்டர்களின் ரிபோர்டு.

1930 ஷு மார்ச்சு மீ 31 உ வரையிலுள்ள வரவு சிலவுக் கணக்கையும் ஆடிட் ரிபோர்டையும் ஆஜர் படுத்துகிறோம்.

ரூரல் இந்தியா பத்திரிகைககு பஞ்சாயத்துகளிடமிருந்து வர வேண்டிய சந்தா பாக்கி ரூ. 3834-3-0 ஆக விருக்கிறது. நெல்லூர் ஜில்லாவின் பஞ்சாயத்துகளிடமிருந்து மாத்திரம ரூ 924 வரவேண்டியதாக விருக்கிறது. பாககி வைத்துக்கொண்டிருக்கிற பஞ்சாயத்துகளுக்கு பல ரிமைண்டர்கள் அநுப்பப் பட்டன. இனியாவது பஞ்சாயத்தார்கள் யூனியனுக்குச் செலுத்த வேண்டிய பாககிகளை தாமதமில்லாமல் உடனே செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஆடிடரின் ரிபோர்டுபடி ரூரல் இந்தியாவில் ரிவியூவிற்காக வரும் புத்தகங்களின் சம்பந்தமாக ஒரு ரிஜிஸ்டர் வைக்கப்படும். மேற்கூறிய புத்தகங்கள் யூனியனின் சொத்துகளாக பாவிக்கப்படும்.

டைரெக்டர்கள் ஆபீஸ் சிப்பந்திகளுக்கு ஒரு மாச சம்பளத்தை இனாமாகக் கொடுக்க உத்தேசிக்கிறார்கள்.

கையொப்பம்:—ஷேக் அப்துல்லா
,, பி. சின்னசாமி ரெட்டி
,, எஸ. ஈசுவர ஐயர்

ஏ. இராஜகோபால் ரெட்டி
பிரஸிடெண்டு.

199394

# நமது உணவு.

## சரீரத்திற்கு வேண்டிய உலோக வஸ்துக்களும், உப்புக்களும்.

நம்முடைய உணவுகளில் இருக்க வேண்டிய உலோக வஸ்துக்களில் கால்ஷியம் என்பது வெகு முக்கியமானது. பற்களையும், எலும்புகளையும் உண்டாக்கி வலுக்கச் செய்வதற்குக் கால்ஷியம் வெகு அவசியமானது. இரத்தத்தில் கால்ஷியம் இருப்பதால் தான் சரீரத்தில் காயம் பட்டு இரத்தம் வந்தால் இரத்தம் வெளியே கொட்டிப் போகாமல் கட்டியாகி நின்றுவிடுகிறது. கால்ஷியம்தான் நமது சரீரம் சாப்பாட்டிலுள்ள கொழுப்பு வகைகளையும் இரும்பையும் உட்கொண்டு உபயோகித்துக் கொள்வதில் வேலை செய்கிறது. உணவுகளில் கால்ஷியம் தக்க அளவுகளில் அமையாதிருந்தால் ஜனங்களுக்கு பல ஹீனம் உண்டாகும், எலும்புகள் துவண்டுபோகும், பற்கள் அழிந்து போகும், குழந்தைகள் மார்கொண்டை பின்னிக்கொண்டு சுருங்கி வளரும்.

கோதுமை, அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்களிலும் உருளைக்கிழங்கு முள்ளங்கி முதலிய கிழங்குகளிலும், சக்கரை, தப்பாக்கி அரிசி, ஜவ்வரிசி மாம்சம் முதலிய வஸ்துக்களிலும் கால்சியம் வெகு குறைவாக இருக்கிறது. நமது உணவுகள் மேற்கூறிய வகைகளையே அதிகமாகக் கொண்டால் சரீரத்திற்கு வேண்டி அளவுகளில் கால்சியமானது அவ்வுணவுகளிலிருந்து ஏற்படாது. மேலும், சரீரம் அவைகளிலிருந்து இதர உலோக உப்புகளை அளவிற்கு மேல்பட்டு அடைந்து கொள்ளுப.

பால், தயிர், மோர், முட்டை, கொட்டைகள், பருப்புகள், பழங்கள், கீரைநிறைந்த காய்கறிகள் முதலியவைகளில் கால்சியம் நிறைந்திருக்கிறது. நம்முடைய உணவுகள் மேற்கூறியவைகளை அதிகமாக வஹித்தால் நமமுடைய சரீரம் அதற்கு வேண்டிய அளவுகளில் கால்சியத்தை அடைந்து கொள்ளும். பாலில் தான் கால்சியம் அதிகமாக விருக்கிறது. குழந்தைகள் ஒரு பைண்டு பாலைநாளொன்றுக்கு உட்கொண்டால் அவைகள் சரீரத்திற்கு வேண்டிய கால்சியத்தை அடைந்து கொள்ளக்கூடும்.

கால்சியத்தைப் போலவே பாஸ்பரஸ்ஸும் சரீரத்திற்கு வேண்டிய உலோகவஸ்துக்களில் வெகு முக்கியமானது. அது கால்சியத்தோடு சம்பந்தப் பட்டுக் கொண்டு பற்களிலும், எலும்புகளிலும், அவைகளின் முக்கிய பாகமாய் வாய்ந்திருக்கிறது. சரீரத்தில் ஒவ்வொரு கணத்திலும் பாஸ்பரஸ் இருக்கிறது. கணங்கள் அதிகமாக உண்டாவதால் தான் சரீரம் வளருகிறது. சரீரவளர்ச்சிக்கும், சரீரக் கணங்கள் அதிகமாக அதிகமாக உண்டாவதற்கும் பாஸ்பரஸ் வெகு அவசியமானது. இரத்தத்திலும் அது முக்கியமாக இருக்கிறது. பால், தயிர், மோர், முட்டை, மொச்



சக்கொட்டை, பருப்புகள், கோதுமை, ஓட்ஸ், பார்லி, சோளம், கேழ்வரகு, முள்ளங்கி, வெள்ளரிக்காய், காலிபிளவர், மாம்ஸம், மீன் முதலியவைகளில் பாஸ்பரஸ் அதிகமாக விருக்கிறது. மில்லில் அரைத்த அரிசி, வெண்மையான மாவுகள், கிழங்குகள் முதலியவைகளில் பாஸ்பரஸ் குறைவாக விருக்கிறது.

உணவுகளில் பாஸ்பரஸ் குறைவாகவிருந்தால் எலும்புகளும் பற்களும் சரியாய் வளரா. பற்கள் பொக்கையாக அமைவதற்குக் காரணம் பாஸ்பரஸ் அதிகமாகவும், கால்ஷியம் குறைவாகவும் உணவுகளில் இருப்பது தான். நமது உணவுகளில் பாஸ்பரஸ் அதிகமாக விருக்கிற வஸ்துக்களும் கால்ஷியம் அதிகமாக விருக்கிற வஸ்துக்களும் ஒன்று கூட்டப்பட வேண்டும்.

இரும்பும் நமது உணவுகளில் முக்கியமாயிருக்க வேண்டிய பொருள்களில் ஒன்று. இரும்புதான் இரத்தத்திற்கு சிகப்பு நிறத்தைக் கொடுத்து அதை சுவாஸ கோசத்திலிருந்து ஆக்ஸிஜனை எல்லா அவயவங்களுக்கும் கொண்டுபோகும்படிச் செய்கிறது. ஸ்திரீகளுக்குப் புருஷர்களைக் காட்டிலும் அதிக இரும்பு தேவை. வயது வந்தவர்களைக் காட்டிலும் வாலிபர்களுக்கு அதிக இரும்பு தேவை. உணவில் இரும்பு குறைவாயிருந்தால் இரத்தம் குறையும், சரீரச் சூட்டைத் தக்கபடி எரிக்கப் போதுமான ஆக்ஸிஜனும் இராது. ஆகவே, நாம் பலக்குறைவினால் கஷ்டப்படுகிறோம். கொழுப்புகளிலும், சக்கரையிலும், வெண்மையான அரிசியிலும், வெண்மையான மாவுகளிலும் இரும்பு வெகு வெகு அல்ப அளவில்தான் இருக்கிறது. கல்லீரல், சிகப்பு மாம்ஸம், முட்டை, பருப்பு, குத்தாத தானியங்கள் வெங்காயம், முள்ளங்கி, தர்பூசிப்பழம், வெள்ளரிக்காய், தக்காளிப்பழம் முதலியவைகளில் இரும்பு அதிகமாக விருக்கிறது. விடாமின்சு A, B, C. E யும், கால்சியமும், கல்லீரலால் உண்டுபண்ணப்பட்ட ஒருவஸ்துவும், இரும்பை சரீரம் தக்கபடி உபயோகிக்கும்படி செய்விக்கின்றன. இவ்வஸ்துக்களும் உணவுகளில் தக்கபடி அமைய வேண்டும்.

சாதாரண உப்பு சரீரத்திற்கு வேண்டிய முக்கிய வஸ்துக்களில் ஒன்று. அது இரத்தத்தை நல்ல ஸ்திதியில் வைக்கிறது, சரீர பாகங்களில் ஈரமிருக்கும்படிச் செய்கிறது, எல்லா அவயவங்களையும் நன்றாய் வேலை செய்யும்படிச் செய்கிறது. உருளைக்கிழங்கு, காய்கறிகள், பருப்புகள் இவைகளையே ஆஹாரத்தின் பெரும்பாகமாகக் கொள்கிறவர்கள் ஆஹாரத்தில் கொஞ்சம் உப்பைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மேற் கூறிய பொருள்களில் பொடாஸ்ஸியம் அதிகமாகவும், ஸோடியம் குறைவாகவு மிருக்கின்றன. ஆகையால்தான் அவர்கள் கொஞ்சம் உப்பைச் சாப்பாட்டில் சேர்த்துக்

கொள்ள வேண்டும். மாம்ஸங்களில் ஸோடியம் அதிகமாக விருப்பதால் மாம்ஸத்தையே உணவில் பெரும்பாகமாக உபயோகிப்பவர்கள் உப்பைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை. மாம்ஸத்தையும், காய்கறிகளையும் சேர்த்து உண்பவர்கள் கொஞ்சம் உப்பைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக உப்பைச் சேர்த்துக் கொள்வதும் கூடாது. அரிசியை அதிகமாக உண்பவர்களுக்கு உப்பு வேண்டியதேயில்லை. அதிக உப்பைச் சேர்த்துக் கொண்டால் இரத்தக் கால்வாய்களுக்கும் மூத்திர கோசங்களுக்கும் கெடுதி நேரிடும்.

நமது சரீரத்திற்கு குளோரின் அவசியமாய் வேண்டி யிருக்கிறது. இரத்தத்தைச் சரியான ஸ்திதியிலிருக்கும்படிச் செய்வதற்கும் இரைப்பையில் உணவு சரியாக ஜீர்ணமாவதற்கும் வேண்டிய பொருளாகிய ஹைட்ரோ குளோரிக் ஆஸிடை உண்டாக்குவதற்கும் அது தேவையாயிருக்கிறது. வாழைக்காய், வாழைப்பழம, பேரிச்சம்பழம், பசலைக்கீரை, ஆன்ஞுசிப்பழம் கீரைகள் முதலியவைகளில் குளோரின் அதிகமாக விருக்கிறது.

நமது தொண்டையில் தைராய்டு கிளாண்டு என்று ஒரு முக்கியமான பாகமிருக்கிறது. அயடீன் குறைவாக விருக்கிற உணவை நாம் புசித்தால் தைராய்டு கிளாண்டிற்கு நோய் வரும். அது பெருத்துப் போகும். அநேகமான பழங்களிலும கீரைகளிலும அயடீன் இருக்கிறது. சமுத்திரத்தில் அயடீன் அதிகமாக விருப்பதால் மீன் எண்ணெகளில் அது வேண்டிய அளவில் இருக்கிறது. நமது சரீரத்திற்கு சிறிது அளவில் தான் அயடீன் தேவை. அயடீன் நாம் உட்கொள்ளும உணவிலுள்ள கொழுப்புகளையும் கால்ஷியத்தையும் உபயோகிக்கிறது.

உலோக உப்புகளெல்லாம் நீரில் கரைந்து விடுகின்றன. சமையல் செய்யும பொழுது காய்கறிகள் வெந்த நீரைக் கொட்டி விடக்கூடாது. உலோக உபபுகள் அந்த நீரிலிருப்பதால சமைதத கறிகளில் அவைகளில்லாமல் போய்விடும். ஆகவே காய்கறிகளைச் சமையல் செய்வதில் ஜலத்தை குறைவாக வைத்து அதைச் சுண்டச்செய்து கொள்வதே சரியான வழி. நாம் தினந்தோறும் சில சாகங்களைப் பச்சையாகவே சாப்பிட வேண்டும். முள்ளங்கி தக்காளிப்பழம் முதலியவைகளைப் பச்சையாகவேயும் சாப்பிடலாம்.

நமது தேகத்துக்கு வேண்டிய உலோக உப்புக்களெல்லாம் பால், தயிர், மோர், கீரை தினிசுகள் காய்கறிகள் அரிசி, கோதுமை, இவைகள் சேர்ந்த உணவுகளில் சரியான அளவுகளில் இருக்கின்றன.

உலோக உப்புக்கள் உணவுகளில் குறைவாக விருந்தால் தேக வளர்ச்சி சுருங்கிப்போகும், எலும்புகள் பலக்குறைவையடையும், பற்கள் சரியாக



அமையா, இரத்தக்குறைவு, சோகை பசியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்கள் உண்டாகும்.

உலோக உப்புக்களை சரீர சத்தில் சேர்ப்பதற்கு விடாமின் A, C, D, தேவை.

## கொழுப்புகள்.

வெண்ணெய், நெய், மாம்ஸக் கொழுப்பு, எண்ணெய்கள் முதலியவைகள் தான் கொழுப்புகள். கொழுப்புகள் சக்கரை, வெல்லம், தேன், சில பழங்கள் இவைகளில் தவிர மற்ற எல்லா உணவுப் பொருள்களிலும் இருக்கின்றன. அவைகள் மாம்ஸங்களின் கொழுப்பு பாகங்களிலும். எலும்புகளின் உள்புறங்களிலும், வெண்ணெயிலும், நெய்யிலும், பால் ஏடுகளிலும், கல்லீரலிலும், மீன்களிலும் மீன் எண்ணெய்களிலும் கொட்டைகளிலும், விரைகளிலும் இருக்கின்றன. ஓட், கம்பு, சோளம் முதலிய தான்யங்களில் கொழுப்பு அதிகமாக விருக்கிறது. செவ்வரிசி, தப்பாக்கி அரிசி முதலியவைகளில் கொழுப்பு கொஞ்சமாய்த்தான் இருக்கிறது. மில்களில் தீட்டப்பட்ட அரிசியிலும் கோதுமையிலும் கொழுப்பே இல்லையென்றே சொல்ல வேண்டும். துவரம்பருப்பு முதலிய பருப்புகளிலும் கொள்ளிலும் கொழுப்பு போதுமான அளவில் இருக்கிறது. பழங்களில் கொழுப்பு வெகு குறைவான அளவில் இருக்கிறது. காய்கறிகளில் கொழுப்பு குறைவாகத்தான் இருக்கிறது. ஆனபோதிலும் மற்ற சாகங்களில் காட்டிலும் முள்ளங்கியிலும், நூல்கோலிலும், கத்தரிக்காயிலும், காலிபிளவரிலும், பசலைக்கீரையிலும், கொழுப்பு அதிகமாகவிருக்கிறது.

கொழுப்புகள் சரீரத்திற்கு வேண்டிய தீபன உணவுகளில் வெகு முக்கியமானவை. ஆனால் அவைகளில் கொஞ்ச அளவுதான் நம்முடைய சரீரத்திற்குத் தேவை. கஞ்சித்திரவப் பொருள்களைப் போலும், ஊன் பதார்த்தங்களைப் போலும் அதிக அளவுகள் தேவையில்லை. கஞ்சித்திரவப் பதார்த்தங்களையும், ஊன் பதார்த்தங்களையும் காட்டிலும் அவைகள் சரீரத்தில் அதிக தீபனத்தை உண்டு பண்ணுகின்றன.

நம்முடைய சரீரத்தில் சர்மத்தின் அடியில் கொழுப்புகள் அடையாகவிருந்து கொண்டு சரீரம் சூட்டை இழக்காமலிருக்கும்படி பாதுகாக்கின்றன. அவைகள் மூத்திர கோசங்கள் முதலிய சில உள் அவயவங்களில் இருந்து கொண்டு அவைகளுக்குத் தீங்கு ஏற்படாமல் பாதுகாக்கின்றன, சதைகளிலிருந்து கொண்டு அவைகளுக்கு வலிவைக் கொடுக்கின்றன.

சாக வகை கொழுப்புகளும் மிருக வகை சம்பந்தமான கொழுப்புகளும் தீபன வழியில் உபயோகப்படுகின்றனவே ஒழிய அவைகள் சரீரப் போஷ

ணத்திற்கு உபயோகமாகிறதில்லை. ஆனபோதிலும் மிருக வகைக் கொழுப்புகளில் சரீர வளர்ச்சி, ஆரோக்கியம், நோயின்மை இவைகளுக்காக அவசியமாகத் தேவையாயிருக்கிற விடாமின் A இருக்கிறது. சாக வகைக் கொழுப்புகளில் விடாமின் A இல்லை. ஆனதுபற்றி மிருக வகைக் கொழுப்பு சாக வகைக் கொழுப்புகளைக் காட்டிலும் திறமானவை. ஆகவே நாம் சாக வகைக் கொழுப்புக்களை உபயோகித்தால், விடாமின் A இருக்கிற வஸ்துக்களை அதிசமாக உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். மிருக வகைக் கொழுப்புகளாகிய பால், மோர், தயிர், நெய் முதலியவைகளில் விடாமின் A அதிகமாயிருக்கிறது. இப்பொருள்கள் நமக்குச் சரியானபடி அகப்படுகிறதில்லை. கலப்பு நெய்கள் தான் கிடைக்கின்றன. ஆகவே, மாம்ஸங்களைப் புசிப்பவர்கள் இப்பொருள்களைத் தேவையான அளவுகளில் அடையாமலிருந்தால் கல்லீரல், மீன், முட்டை, மீன் எண்ணெய் முதலியவைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மாம்ஸம் சாப்பிடாத ஜனங்கள் கீரைகளையும், தக்காளிப் பழத்தையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மேற்கூறிய பொருள்களில் விடாமின் A அதிகமாகவிருக்கிறது.

கோகோஜமிலும் மார்கரின் என்கிற நெய்யிலும் விடாமின் A இல்லை. அவைகளை ஜனங்கள் உபயோகித்தால் விடாமின் A இருக்கிற தக்காளிப் பழம் முதலிய வஸ்துக்களை அவர்கள் அதிகமாக உபயோகிக்க வேண்டும். விடாமின A யும் D யும் மீன் எண்ணெயில் அதிகமாகவிருக்கின்றன. கொஞ்சம் மீன் எண்ணெயை உணவுகளோடு சேர்த்துக் கொண்டாலும் போதும். கொழுப்புகள் சரீரத்திற்கு தீபனத்தை உண்டாக்குகிற வகையிலும், விடாமின் Aயைக் கொடுக்கிற வகையிலும் உபயோகப் படுகின்றன. சரீரம் கால்சியத்தை உபயோகித்துக் கொள்ளுகிற வழியில் அவைகள் சாதகப்படுகின்றன. அவைகள் சரீர உள்பாகங்களில் யாதொரு காயமோ இதர தீங்கோ ஏற்படாதபடி காப்பாற்றுகின்றன. அவைகள் கஞ்சித்திரவ பதார்த்தங்களினால் குடலில் உண்டாகக் கூடிய அதிக திராவகங்கள் குடலின் சுவர்களில் யாதொரு தீங்கையும் விளைக்காதபடியும் பாதுகாக்கின்றன. மிருக வகைக் கொழுப்பு தக்கபடி உபயோகிக்கப் பட்டால் நோய்களும் விஷக்கிருமிகளும் சரீரத்தை அடையா. அளவுக்கு மேல் அதிக கொழுப்பு உட்கொள்ளப் பட்டால் அஜீர்ணமும், மலச்சிக்கலும் உண்டாகும். வளாகிற குழந்தைகளுக்கு கொழுப்பு உணவுகள் தேவை. சரீரம் கொழுப்புகளை நன்றாய் உபயோகிப்பதற்கு விடாமின் Aயும் Bயும் அயடீனும் கஞ்சித்திரவ பதார்த்தங்களும் தேவை.



# பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

(62-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி).

## VI

1928-29-ம் வருஷத்திய பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சம்பந்தமான கவர்மெண்டு பரிபாலனப் பிரகடனத்தின்படி நம்முடைய மாஹாணத்தில் 1·102 பாரெஸ்டு பஞ்சாயத்துகள் இருந்தன ; 3,44,483, சதுர மைல் மொத்த விஸ்தீர்ணத்தை யுடைத்தாயிருந்தன ; ரூ. 1,59,493-15-0 யாகிய மொத்த அஸ்ஸெஸ்மெண்டு அவைகளால் கவர்மெண்டுக்குச் செலுத்தப்பட்டது. ரெவின்யூ போர்டாரும் பஞ்சாயத்துக் காடுகளின் நிர்வாஹ ஒழுங்கு திருப்திகரமான வழியில் அமைந்திருந்ததென்றே மொழிந்தார்கள். பஞ்சாயத்துப் பிரத்தியேக இலாகா 1922ல் ஏற்படுத்தப்பட்டது. அது முதல் இதுவரையிலும் புதுக்கிணறுகளை வெட்டுவதிலேயும், பழய கிணறுகளை மராமத்து செய்வதிலேயும், குளம் குட்டைகளை வெட்டுவதிலேயும் பஞ்சாயத்துகள் ரூ. 60,000 சிலவு செய்திருக்கின்றன; ரூ. 17,000 சிலவிட்டு முள் காடுகளை அழித்திருக்கின்றன; இவ்வேலைகளையெல்லாம் அவைகள் கவர்மெண்டுக்கு அதிக தீர்வையைச் செலுத்திய பின்பும் பலவித கஷ்டங்களோடிருந்து கொண்டும் செய்திருக்கின்றன. 1928-ம் வருஷ ஆரம்பத்தில் தோராயமாக எடுக்கப்பட்ட ஒரு கணக்கின்படி பஞ்சாயத்துகள் 3½ லக்ஷம் விருக்ஷங்களை நட்டிருக்கின்றனவென்று அறியப்பட்டது.

பிரத்தியேக இலாகா வேலைகளை ஆரம்பித்த கொஞ்ச நாள்களுக்கெல்லாம் செங்கல்பட்டு ஜில்லா பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தங்களுடைய அபிவிருத்தியின் நோக்கமாக ஒரு யூனியனைச் சேர்த்து அமைந்தன. இப்படி உண்டான செங்கல்பட்டு ஜில்லா யூனியனது 1924 வருஷம் மார்ச்சு மாதத்தில் ஒரு பாரெஸ்டு பஞ்சாயத்து மாஹாண மஹாநாட்டைக் கூட்டிற்று. அக்கன்பரன்ஸில் கனம் ஸர். ஆர்தர் நாப் அக்ராஸனம் வஹித்தார். அவர் அக்ராஸன உபந்நியாஸத்தில் சொன்னதாவது:—

முதல் முதலில் பஞ்சாயத்துகள் காடுகளை திருப்திகரமாகப் பரிபாலிக்கவில்லை. ஆனால் பிரத்தியேக இலாகா நியமிக்கப்பட்ட பிறகு பஞ்சாயத்து இயக்கம் வலுத்தது. கவர்மெண்டார் பஞ்சாயத்துகளின் நிர்வாஹ வேலையைக் கவனித்து வருகிறார்கள். அவைகள் மேல் மேலும் திருப்திகரமாக வேலை செய்தால் கவர்மெண்டார் மேல் மேலும் அதிக விஸ்தீரணங்களைப் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்பிக்கத் தயாராக விருப்பார்கள். கவர்மெண்டார் மாஹாணத்திலுள்ள காடுகளை தரம் பிரிக்க உத்தேசித்திருக்கிறார்கள். எக்காடுகள் மேய்ச்சலுக்காகவும் வியவஸாயிகளுக்கு வேண்டிய

மரம் கொம்பு முதலியவைகளைக் கொடுக்கவும் உபயோகப்படுமோ அவைகளையெல்லாம் வியவஸாயிக் காடுகள் என்று தரம் பிரித்துப் பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிப்பார்கள். சகுனங்கள் எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன. நீங்கள் அடுத்த கன்பரன்சில் கூடும் பொழுது பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் வலுத்தோங்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.''

சைதாப்பேட்டை கன்பரன்சு வெகு நன்றாய் நடந்தது. மிஸ்டர் டைர் மனும், ஸர் பிரான்கு நாய்சும் மாஹாண உத்தியோகஸ்தர்களில் சிலரும், ஜில்லா உத்தியோகஸ்தர்களில் சிலரும்' அக் கன்பரன்ஸு நன்றாய் நடைபெறுவதில் வெகு சிரத்தை வஹித்து ஒத்தாசை செய்தார்கள். கன்பரன்சால் இதர ஜில்லாக்களில் உள்ள பஞ்சாயத்துகளையும் ஜில்லா யூனியன்களையும் ஏற்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். ஜில்லா யூனியன்கள் ஏற்பட்டு அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மாஹாண யூனியனை ஸ்தாபித்து, பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் ஒன்றோடொன்று கலந்து ஆலோசித்து, நிர்வாஹ வழியிலும் அபிவிருத்தி வழியிலும் யோஜனைகளை அடையவேண்டுமென்று கருதப்பட்டது. அவைகளின் யோஜனைகளையும், பாரெஸ்டு பஞ்சாயத்து அபிவிருத்தி விஷயங்களையும், கிராம முன்னேற்ற விஷயங்களையும் அடங்கிய பத்திரிகை ஒன்று பிரசுரிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மாஹாண யூனியன் ஏற்படுவதை முன்னிட்டே செங்கல்பட்டு ஜில்லா யூனியனே எல்லா ஜில்லாக்களின் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே மாதிரியான பெர்மிட்டு புத்தகங்களையும், கணக்குப் புத்தகங்களையும் குறைந்த விலையில் தயாரித்து ஸப்ளை செய்தது.

இரண்டாவது பாரெஸ்டு பஞ்சாயத்து மாஹாண கன்பரன்சு சென்னையில் 1926-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெற்றது. அப்பொழுது கவர்னராயிருந்த கோஷன் பிரபு அக்கன்பரன்ஸின் திறப்பு விழாவை நடத்தினர் கவர்மெண்ட் ஹோம் மெம்பராகிய கனம் ஸர் முகம்மது உஸ்மான் ஸாஹிப பஹதூர் அக்ராஸனம் வஹித்தார். கன்பரன்ஸைத் திறக்கும பொழுது கோஷன் பிரபு இவ்வாறு மொழிந்தார்:—

''நீங்கள் இவ்விதமாக கூடுவது உங்களுடைய பஞ்சாயத்து விஷயங்களைக் கலந்து ஆலோசித்துப் பேசி அவ்வியக்கத்தை மேன்மைக்குக் கொண்டு வருகிறது என்பதாகும், மேலும் எவ்வித முயற்சிகளை நீங்கள் கைக் கொண்டால் பஞ்சாயத்துக் காடுகளினால் கிராம ஜெனங்களுக்கு அதிக க்ஷேமமும் சௌகரியங்களும் உற்பத்தியாகக் கூடும் என்றும் நீங்கள் ஆலோசிக்க வேண்டும். ஆகவே பஞ்சாயத்தின் அபிவிருத்தியோ க்ஷீணமோ உங்களுடைய கையில் தான் இருக்கிறது. ஆனபோதிலும் நீங்கள் கூடியமட்டும் நன்றாய்த்தான் ஆரம்பித்திருக்கிறீர்கள்; ஆகவே பஞ்சாயத்து நிர்வாஹத்தி



னால் கிராம ஜனங்களுக்கு க்ஷேமமும் செல்வமும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லையென்று என் புத்திக்குப் படுகிறது. ஆதியில் பஞ்சாயத்துகள் நன்றாய் வேலை செய்யவில்லை; 1923 வரையில் அவைகளுடைய நிர்வாஹம் அவ்வளவு சுவாரஸ்யமாக விருக்க வில்லை. 1923-இல் தான் அஸ்ஸெஸ்மெண்டுகள் பஞ்சாயத்துகளுக்குச் சௌகரியமாக ஏற்படுத்தப்பட்டன. அஸ்ஸெஸ் மெண்டுகளை நிர்ணயிக்கிற வழியே மாற்றப்பட்டது: உடனே பஞ்சாயத்துகள் நன்றாய் வேலை செய்ய ஆரம்பித்தன. மேல்மேலும் அதிக மேய்ச்சல் பூமிகளும், விறகுக் காடுகளும் அவைகளின் நிர்வாகத்திற்கு ஒப்புவிக்கப் பட்டன. பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் வலுத்து ஓங்கியிருக்கிற காரணம் பற்றி 4000 சதுர மைல் பாரெஸ்டு விஸ்தீரணம் சீக்கிரத்தில் பஞ்சாயத்து நிர்வாஹத்திற்கு ஒப்பிவிக்கப்படலாம். பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கத்தினால் கிராம ஜனங்களுக்கு செல்வமும் க்ஷேமமும் ஏற்பட வேண்டியதென்பதொன்றேயல்லாமல் பாரெஸ்டு டிபார்டுமெண்டுக்கு அதினால் நன்மை ஏற்பட வேண்டுமென்றும் கவர்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்.''

III வகுப்புக் காடுகளிலுள்ள வியவஸாயக் காடுகளுள் அநேக ஸ்தலங்கள் இன்னும் பஞ்சாயத்து நிர்வாஹத்திற்கு மாற்றப்படவில்லை.

II வகுப்பிலும் கிராமக் காடுகள் இருக்க வேண்டும். அவைகளும் மாற்றப்பட வேண்டும். இவைகள் எல்லாம் மாற்றப்பட்டால் விஸ்தீரணம் கோஷன் பிரபு கூறிய 4000 சதுர மைல்களுக்கு அதிகமாகத் தானிருக்கும்.

கன்பரன்சில் அநேக தீர்மானங்கள் நிறைவேறின. 16-வது தீர்மானத்தில் பஞ்சாயத்துகளின் பணங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு ஒரு பாங்கில் அவைகளைப் போட்டு வைத்து நிர்வாஹித்துக் கொண்டும் ஏழை பஞ்சாயத்துகளுக்கு கடன் கொடுத்து உதவி செய்து கொண்டுமிருப்பதற்காக ஒரு மாஹாண யூனியன் ஏற்படுத்தப்பட வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. 17-வது தீர்மானத்தில் பத்திரிகையொன்று பிரசுரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அநுபவ பூர்வமாக ஏற்படும் யோஜனைகளையும் அபிவிருத்தி முறைகளையும், கஷ்டக் குறைகளையும் மற்ற பஞ்சாயத்துகளும் தெரிந்து கொண்டால் அவைகளும் அதனால் பயன்படக் கூடுமாதலாலும் பாரெஸ்டு பஞ்சாயத்துப் பொது விஷயங்களும் எழுதப்பட்டால் அவைகளை பஞ்சாயத்தார் வாசித்து விவேகத்தை அடையக் கூடுமாதலாலும், அப்பத்திரிகையின் மூலமாக கவர்மெண்டார் பஞ்சாயத்து அபிவிருத்தி விவரங்களைத் தெரிந்து கொள்ளக் கூடுமாதலாலும், பஞ்சாயத்தார்களும் கிராம ஜனங்களும் பஞ்சாயத்து இயக்க சம்பந்தமாய் வெளியிடும் பொது உத்திரவுகளை அதன் மூலமாயத் தெரிந்து கொள்ளக் கூடுமாதலா

லும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு இம் மூன்று பாஷைகளிலும் ஒரு பத்திரிகை பிரதிமாசமும் பிரசுரமாக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கன்பரன்சின் முதல் பாதிகாலத்தில் ரெவினியூ போர்டில் பாரெஸ்டு பஞ்சாயத்து விஷய அதிகாரியாயிருந்த திவான் பஹதூர் டி. ராகவய்யா ஸீ. எஸ். ஐ. அவர்கள் அக்ராசனம் வஹித்தார். பின் பாதிகாலத்தில் கனம் ஸர். முகம்மத் உஸ்மான் சாகிப் பஹதூர் அக்ராஸனராக விருந்தார். பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீஸரும், பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களும் வந்திருந்தார்கள். பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்கள் தங்கள் தங்களுடைய பிரதேசங்களிலுள்ள விவரங்களை ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக்கொண்டு யோசனைகளை யடைந்ததும் தவிர, பஞ்சாயத்தார்களுக்கு கஷ்டங் குறை சம்பந்தமாக யோசனைகளையும் சொன்னார்கள்.

மூன்றாவது மாகாணக் கன்பரன்சு சென்னையில் 1928 மார்ச்சு மாதத்தில் நடைபெற்றது. ஹோம மெம்பர் கனம். ஸர் உஸ்மான் சாகிப் அதைத் திறந்தார். திவான் பகதூர் பி. கேசவ பிள்ளை சி. ஐ. ஈ, அவர்கள் அக்ராஸனராக விருந்தார், ரெவினியூ போர்டு செக்ரிடரி மிஸ்டர் பி. ஜி. ஹோல்ட்ஸ்வர்த்து ஐ. ஸி. எஸ். அவர்களும், பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீசரும், சில பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களும் வந்திருந்தார்கள். 500 பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

நான்காவது மாஹாணக் கன்பரன்சு ஒங்கோலில் திவான் பஹதூர் பி. முனிஸாமி நாயிடுகாருவின் தலைமையின் கீழ் 192:-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் நடைபெற்றது. 200 பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பாரெஸ்டு பஞ்சாயத்து ஆபீசரும் வந்திருந்தார். அக் கன்பரன்சில் பாரெஸ்டு பஞ்சாயத்து அஸ்ஸோஷியன் என்று ஒரு மாஹாணச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்தும அதில் மெம்பராகச் சேர வேண்டுமென்றும், பஞ்சாயத்தார் அல்லாத பஞ்சாயத்து இயக்கத்தில் ருசியுள்ள இதரர்களும் மெமபராகலா மென்றும் விதிக்கப்பட்டது. அந்த சங்கத்தின் நோக்கங்களாவன: மாஹாணத்தில் பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கம் அபிவிருத்தியாக வேண்டு மென்பதும், கன்பரன்சுகளில் கைக்கொள்ளப்படும் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர முயர்ச்சி செய்வதும், ஜில்லா, தாலூக்கா கன்பரன்சுகளை ஏற்படுத்துவதும். அந்த அஸ்ஸோஷியேஷனுக்கு திவான் பஹதூர் பி. முனிசாமி நாயுடுகாரு பிரசிடெண்டாக நியமிக்கப் பட்டார்.

1926-இல் நடந்த மாஹாணக் கன்பரன்சின் 16-வது தீர்மானத்தின்படி ஏற்படுத்தப் பட்ட மாஹாண பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனுக்கு கோ ஆபரேடிவ் ஸொஸைடி சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்படக் கூடவில்லை.



ஆகவே, 1928-ம் வருஷம் 31 உ அது இந்தியன் கம்பனிஸ் சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. அதற்கு "பாரெஸ்டுப் பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட் என்கிற புதுப் பெயர் கொடுக்கப்பட்டது. அதன் நோக்கங்கள் : பாரெஸ்டு பஞ்சாயத்துகளை ஆதரித்து அபிவிருத்தி செய்வதும், பஞ்சாயத்து பாரெஸ்டுகளின் அபிவிருத்திக்குச் சாதகமான முயர்ச்சிகளை நடத்துவதும், கிராம ஜனங்களின் க்ஷேமத்திற்காக உழைப்பதும், ஆர்டிகில்ஸ் ஆப் அஸ்ஸோஸியேஷனின் படி பாங்கிக்கு வேலையைச் செய்வதும்: யூனியனின் மூலதனம் 20000 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டது; அதாவது பங்கு ஒன்று 1 ரூபாய்ப்படி 20000 பங்குகளுக்கு 20000 ரூபாய்கள். யூனியன் சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார்களின் நிர்வாகத்திலேயே தான் இருக்க வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் தான் பங்குக்காரர்களாகலாம்.

ஆர்டிகில்ஸ் ஆப் அஸாஸி யேஷனின் 75 (1) விதிப்படி யூனியனின் ஸ்டாடியூடரி ஜனரல் மீடிங்கு யூனியனின ஆபீசில் 1929 வருஷம் ஜூன் மாசம் 4 உ நடத்தப்பட்டு ஸ்டாடு யூடரி ரிபோர்டு ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பனி ரிஜிஸ்டிராரிடத்தில் தாகல் செய்யப்பட்டது.

யூனியன் கணக்குக்கு ஸெண்டிரல் அர்பன் பாங்கியில் ரூ 31, 956-10-6 டிபாஸிட்டுகளாக வந்து சேர்ந்தது. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தங்களுக்கு வந்த வருமானங்களில் சிலவழிந்த பணங்கள் போக மீந்த பணத்தில் எதிர் பார்க்கக் கூடிய சிலவுகளுக்குப் பணத்தை நிறுத்திக் கொண்டு மீதியை டிபாஸிட்டுகளாக அநுப்பிவித்தன. டிபாசிட்டுகளை பாங்கி அடைந்ததும் அது யூனியனுக்கு அட்வைஸை அநுப்புகிறது. யூனியனில் பெயரேட்டுக் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. பாங்கியிலிருந்து அட்வைஸ் வந்த தக்ஷணமே டிபாஸிட் தொகையானது அதில் பதிவு செய்யப்படுகிறது. இதுவரையிலும் ரூ. 10,345-15-6 பஞ்சாயத்துகளின் அப்ளிகேஷன்படி திருப்பிக் கொடுக்கப் பட்டிருக்கிறது, 663 பங்குகள் 100 பஞ்சாயத்தார்களால் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துகளுக்கு கடன்கள் கொடுக்கப்பட்டன. அவைகளின் மொத்தம் ரூ. 625. அத்தொகையில் ரூ, 465 வசூலிக்கப்பட்டது. ரூரல் இந்தியாப் பத்திரிகையானது பஞ்சாயத்து கன்பரன்சின் தீர்மானத்தின்படி பிரசுரிக்கப்படுகிறது. பிரதி பஞ்சாயத்தும் அதற்கு சந்தாதாரராகக் கட்டாயமாயிருக்க வேண்டியிருக்கிறது. 127 இதர சந்தாகாரர்களு மிருக்கிறார்கள். அட்வர்டிஸ்மெண்டுகளின் மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40 வருகிறது. ஒவ்வொரு கன்பரன்சிலும் பஞ்சாயத்தார்கள் ரூரல் இந்தியாப் பத்திரிகை பஞ்சாயத்தார்களுக்கு வெகு உபயோகமாக விருக்கிறதென்றும் அது நிற்காமல் நடைபெற வேண்டுமென்றும் கூறி வந்திருக்கிறார்கள். கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்து சம்பந்தமான புல்லெட்டின்களையும் ஸர்குயுலர்களையும் அதில் பிரசுரித்தால் பஞ்சாயத்தார்களுக்கு வெகு சௌகரியமாக விருக்கும்.

(தொடரப்படும்.)

## மதிப்புரை.

சுகாதார நூல்:—ஆசிரியர் சி. இராமமூர்த்தி பி. ஏ., எம். பி. பி. எஸ். பி. எஸ். எஸ். சி. விசாகப் பட்டணம் மெடிகல் காலேஜில் விஷக்கிருமி சாஸ்திர போதகர்: சென்னை மாக்மிலன் அண்டு கம்பனியாரால் பிரசுரிக்கப்பட்டது 1929.

இது வரையில் பிரசுரமாயிருக்கும் சுகாதார நூல்கள் எல்லாவற்றிலுமேயே இது தான் உயர்வானது. தேகத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள விரும்புவோர் அனைவர்க்கும் இது வெகு அவசியமான புஸ்தகம். சுகாதார விஷயங்களெல்லாம் இப் புத்தகத்தில் வெகு தெளிவாய் உரைக்கப்பட்டிருக்கின்றன எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் ஸெகண்டரி ஸ்கூல் மாணவர்களுக்கும் வெகு உபயோகமான புஸ்தகம்: ஸ்வாஸ மண்டலம், ஜீரணமண்டலம், நரம்பு மண்டலம் விஸர்ஜன மண்டலம் முதலியவைகளைப்பற்றின பாகங்கள் வெகு நன்ருய் வரையப்பட்டிருக்கின்றன. புத்தகம் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை 10 அணா தான். ஆரோக்கியத்தை விரும்புகிற தமிழ் நாட்டு ஜனங்கள் அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய புத்தகம் இது.

நல்ல தருணம்! **அறிக்கை** தக்க சமயம்!!

பாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளுக்கு அவசியமாக வேண்டிய கீழ்க்கண்ட ரசீது புத்தகங்கள் வெகு நேர்த்தியாகவும், சுத்தமாகவும் அச்சிட்டு, குறைந்த விலைக்கு நம்மிடம் தயாராக இருக்கின்றன.

விவரம்.

1. குற்ற ரிபோர்ட்டு (ரூ 2) (Offence Report)
2. மேய்ச்சல் உத்திரவுச் சீட்டு (ரூ 1) (Cattle Permit Pass Book)
3. எருத்தழை பாஸ் (அணா 12) (Green Leaves and Manure Pass Book)
4. உலர்ந்த சுள்ளி, குண்டுக்கல் பாஸ் (அணா 12) (Dead wood, Quarrying etc., Pass Book)
5. மாதாந்திர ரிபோர்ட்டு 100 பாரம் (ரூ 1) (Monthly Report 100 forms)

Note :—மேல் கண்ட (5 வது தவிர) ஒவ்வொரு புத்தகங்களும் ஒரிஜினல், டூப்ளிகேட்டுடன் 100 ஏடுகள் நெம்பரிட்டு சுத்தமாக பயிண்டு செய்யப் பட்டுள்ளன. ஒன்ருக வாங்கினல்

இவை ஐந்தும் ரூ 5--0--0 தான்.
தபால் சார்ஜு வேறு (ரூ 1--0--0).

முன் பணம் கீழ்கண்ட விலாஸத்திற்கு அனுப்பியாவது வி. பி. (V. P.) மூலமாவது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர், மாக்ஸீன் அச்சுக்கூடம், செங்கற்பட்டு.

199394

# மேயர்ஸ் பம்புகள்.

உலகப் பிரசித்தி பெற்றவை.




எவ்வளவு ஆழத்திலும் சுலபமாக

வேலை செய்யக் கூடிய கை பம்புகளும்,

நிலம் பாய்ச்சவும் அதிக தண்ணீர் ஸப்ளை

செய்யவும் கூடிய பெரிய பப்புகளும்,

ஜலம் தெளிக்கக் கூடிய பம்புகளும்,

சுலபமாக எடுத்துக் கொண்டு போகக் கூடிய

பம்புகளும்

நம்மிடம் கிடைக்கும்.

**லிமாயீ பிரதர்ஸ் லிமிடெட்,**

1-173 பிராட்வே: தபால் பெட்டி 202: மதராஸ்.

Regd. No. M. 2475. MAY, 1930. Vol. V—5.


# அம்ருதாஞ்சனம்

என்றா லென்ன?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்,

சளுப்பு, பார்சளி,

உப்பசம், ார் மூச்சு,

கழுத்து சளி, ரத்தம் விழுதல்,

சந்திவாய்வு, சீழ் விழுதல்,




சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துக்கள், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன்?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும்! போக்கும்!! போக்கும்!!!

மூன்று விசைகளிலும் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் மதராஸ்.


Published by Mr. A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd, Madras, & Printed At The Magazine Press, Chingleput.